**செய்தி வெளியீடு எண்: 726** **நாள்: 11.10.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், விவசாயிகளிடமிருந்து பெறப்படும் நெல் கொள்முதல் பணிகளை முழுமையாக கணினிமயமாக்கும் வகையில் 7 கோடியே 6 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான மின்னணு கொள்முதல் திட்டத்திற்கான மென்பொருள் செயல்முறையினை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், தேவையான கண்காணிப்பு வழிமுறைகள் அமலில் இருந்தாலும், விவசாயிகளுக்கு சில இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது என்றும், கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது என்றும், குறைபாடுகளாக தெரிவிக்கப்படுகின்றன. இத்தகைய குறைபாடுகளை முழுவதும் களைந்து, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் சிறந்த பயனைப் பெறும் வகையில் தமிழ்நாட்டில் மின்னணு கொள்முதல் e-procurement திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5.8.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், விவசாயிகளிடமிருந்து பெறப்படும் நெல் கொள்முதல் பணிகளை முழுமையாக கணினிமயமாக்கும் வகையில் 7 கோடியே 6 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான மின்னணு கொள்முதல் திட்டத்திற்கான மென்பொருள் செயல்முறையினை (Paddy e-procurement) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த திட்டத்தின் மூலம், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், மின்னணு முறையில் விவசாயிகளிடமிருந்து நெல்லினை கொள்முதல் செய்வதற்கு ஒரு நேரடி நெல்கொள்முதல் நிலையத்திற்கு ஒரு POS (Point of Sale) இயந்திரம் வீதம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கும் மொத்தமாக 2100 Tab, Printerகளும் அதற்கு தேவையான மென்பொருள்களும் உருவாக்கப்பட்டு அதை நிறுவுவதற்கு தேவையான சாதனங்களும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் மூலம், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகை உடனடியாக விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு முழுமையான மின்னணு கொள்முதல் முறை நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. எம். சுதாதேவி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 11.10.2018**